செ.வெ.எண்: 729/2016 நாள்: 18.10.2016

## பத்திரிக்கைச் செய்தி
## தொழில் தொடங்க அரசு மானியத்துடன் கடன் திட்டங்கள்

### 1. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

நமது கன்னியாகுமரி மாவட்டமானது கல்வியறிவு பெற்ற முதன்மை மாவட்டமாக இருந்த போதிலும் படித்த இளைஞர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்வதால் இம்மாவட்ட தொழில் வளர்ச்சிக்கு அவர்களால் எவ்வித பங்களிப்பில்லாத நிலை உள்ளது.

எனவே முதல் தலைமுறையைச் சார்ந்த பட்டப்படிப்பு, பட்டயபடிப்பு, (டிப்ளமோ) அல்லது ITI முடித்த இளைஞர்கள் புதியதாக தொழில் தொடங்குவதற்காக தமிழக அரசு ”புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்” (NEEDS) என்ற மிகச் சிறந்த ஒரு திட்டம் மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

25% மானியத்துடன் கூடிய இத்திட்டத்தின் மூலம் திட்ட மதிப்பீடு ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் புதியதாக உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள் தொடங்கலாம். பொதுப்பிரிவினர் திட்ட மதிப்பீட்டில் 10 சதவிகிதமும், மகளிர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள் ஆகிய சிறப்புப் பிரிவினர் திட்ட மதிப்பீட்டில் 5 சதவிகிதமும் விண்ணப்பதாரரின் சொந்த முதலீடாக செலுத்த வேண்டும். திட்ட மதிப்பீட்டில் 25% (அதிக பட்சம் ரூ.25 இலட்சம்) மானியமாக வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் வங்கிக் கடனுதவி பெற்றவர்கள் முறையாக கடனை திருப்பி செலுத்தும் பட்சத்தில் 3மூ பின்முனை வட்டி மானியமும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் மகளிருக்கு 50% ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் மூலம் ஒரு மாத கால பயிற்சி எவ்வித கட்டணமுமின்றி வழங்கப்படும்.

இந்நிதியாண்டில் (2016-17) இத்திட்டத்திற்கு ரூ.260 லட்சம் மானியமாக வழங்கிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(’த.பி.பா)

எனவே இத்திட்டத்திற்கு மேலும் தகுதியானவர்கள் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டினை எய்திட தேர்வு செய்யப்படவுள்ளதால் கீழ்க்குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள தொழில் முனைவோர்கள் விண்ணப்பங்கள் செய்து பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தகுதிகள் :**

| | | |
|---|---|---|
| கல்வித்தகுதி | : | பட்டப்படிப்பு, பட்டய படிப்பு, ஐடிஐ மற்றும் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனத்தில் தொழில் கல்வி (Vocational Training) |
| வயது வரம்பு | : | **பொதுப்பிரிவினர்**<br>21 வயதுக்கு மேல் 35 வயதிற்குள்<br><br>**சிறப்புப்பிரிவினர்**<br>21 வயதுக்கு மேல் 45 வயதிற்குள்<br>(பெண்கள்/ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், /முன்னாள் இராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள் /திருநங்கைகள்)<br><br>முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருத்தல் வேண்டும். |

2. **படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP )**

தமிழக அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) என்ற திட்டத்தை மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தி வருகிறது.

தமிழக அரசின் மானியம் மற்றும் இலவச பயிற்சியுடன் கூடிய இத்திட்டத்தில் பயன்பெற குறைந்தபட்ச கல்வி தகுதியாக 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு பொது பிரிவினருக்கு 18 முதல் 35 வரையும், சிறப்பு பிரிவினருக்கு (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கையர்) 45 வயது வரையும் ஆகும்.

’(த.பி.பா)

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழில் ஆரம்பிக்க அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ.5 லட்சம் வரையிலும், சேவை தொழிலுக்கு ரூ.3 லட்சம் வரையிலும் வியாபாரத்திற்கு ரூ.1 லட்சம் வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் கடனுதவி பெற தேர்வு செய்யப்பட்டு வங்கி ஒப்புதல் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு ஒரு வார காலம் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி உதவித் தொகையுடன் வழங்கப்படும். பயனாளிகள் பயன் பெற மாவட்ட தொழில் மையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மாவட்ட அளவிலான தேர்வுக்குழு மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தங்கள் பகுதியில் உள்ள வங்கிகளில் கடன் பெற ஏதுவாக அவர்களது விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்படும். வங்கிகள் கடன் வழங்க தகுதியானவர்களுக்கு நிதி உதவி செய்யும். திட்ட மதிப்பில் பொது பிரிவினர் 10 விழுக்காடும், சிறப்பு பிரிவினர் 5 விழுக்காடும் தங்கள் பங்கு தொகையாக சம்பந்தப்பட்ட வங்கிகளில் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களுக்கு திட்ட தொகையில் 25 சதவீதம் மானியமாக சம்பந்தப்பட்ட பயனாளியின் வங்கிக் கணக்கிற்கு மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டிற்கு 150 நபர்களுக்கு கடன் வழங்கிடவும் அதற்கான மானியமாக ரூ.75.00 லட்சம் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மேலும் விபரங்களுக்கு**

பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தொழிற்பேட்டை,
கோணம் அஞ்சல், நாகர்கோவில்-4, அ.எண்-629004 என்ற முகவரியை தொடர்பு
கொண்டு பயன் பெற கேட்டுக் கொள்கிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.